මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு

පොදු කාර්යාලය: 011-2868441, 2868442, 2868443
பொது அலுவலகம்
ෆැක්ස්/தொலைநகல்: 011-2868426
*web : www.elections.gov.lk*
*e-mail : info@elections.gov.lk*

මැතිවරණ කොමිෂන් සභා කාර්යාලය
සරණ මාවත,රාජගිරිය (10107)
தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்
சரண மாவத்தை, இராஜகிரிய(10107)

| මගේ අංකය :<br>எனது இல. **TR/PE/01/2020** | ඔබේ අංකය :<br>உமது இல. | දිනය :<br>திகதி **2020.07.06** |
|---|---|---|

சுற்றறிக்கை இல. **PE/2020/TR-09**

**சகல மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும்**
**பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு,**

**பாராளுமன்றத் தேர்தல் - 2020.08.05**
**தலைமை வாக்கெண்ணல் அலுவலர்கள் / உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு தனிப்பட்ட வகையில் சொந்தமான வாகனங்களைப் பயன்படுத்தல்.**

தமது சேவை நிலையம் அமைந்துள்ள மாவட்டத்தில் வாக்கெண்ணல் நிலையமொன்றில் தலைமை வாக்கெண்ணும் அலுவலராக அல்லது வாக்கெண்ணல் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக அல்லது வாக்கெடுப்புக் கடமைகளுக்கான உதவித் தெரிவத்தாட்சி அலுவலராகப் பணியாற்றுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள அலுவலர்களுக்கு தனிப்பட்ட வாகனம் இருந்தால் அதனை வாக்கெடுப்பு கடமைகளுக்கு சமுகமளிப்பதற்கு மாவட்டத்தின் மாவட்டச் செயலகம் / மாவட்டத் தேர்தல் அலுவலகத்திற்கு செல்வதற்கு மற்றும் வாக்கெடுப்பு நடவடிக்கை முடிவடைந்ததன் பின்னர் மீண்டும் தமது வீடு நோக்கி வருவதற்கும் பயன்படுத்துவதற்கு அனுமதி அளிக்கின்றேன். சேவையாற்றும் மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டத்திற்கு அவ்வாறான கடமைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள அலுவலர் ஒருவர் அம் மாவட்டத்திற்கு செல்வதற்காக தமது தனிப்பட்ட வாகனத்தை பயன்படுத்திக் கொள்வதாயின் அதற்காக குறித்த மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலரின் அல்லது பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணையாளரின் முன்னனுமதியினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். அலுவலர் சேவையாற்றும் மாவட்டத்திற்கு வெளியே மிகத்தொலைவிலுள்ள மாவட்டமொன்றில் கடமை ஒப்படைக்கப்பட்டுள்ள அலுவலர்களின் கோரிக்கைகளுக்கு அரசாங்கத்திற்கு அதிக செலவினத்தை ஏற்படுத்தாதிருப்பின் மாத்திரமே அனுமதி வழங்குதல் வேண்டும்.

02. கடமைக்கு செல்லும் பொருட்டு தனது தனிப்பட்ட வாகனத்தினை பயன்படுத்திக்கொள்வதற்கு அனுமதி கோரும் அலுவலர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்ட வகையில் அனுமதி வழங்குவதற்கும் தாபனவிதிக் கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 8:2 பிரிவின்படி பெற்றோல் வாகனங்களுக்கு ஒரு கிலோமீட்டருக்கு ரூ.12/-வும் டீசல் வாகனங்களுக்கு ஒரு கிலோமீட்டருக்கு ரூ.8/- வும் என்ற அடிப்படையில் அக்கடமைப் பயணத்திற்காக கிலோமீட்டர் கட்டணத்தை கொடுப்பனவு செய்வதற்கு அனுமதி அளிக்கின்றேன். தனிப்பட்ட வாகனத்தை எடுத்துவரும் இந்த அலுவலர்களுக்கு வாகனம் பிரயாணம் செய்த தூரத்திற்கு ஏற்ப (போவதற்கும் வருவதற்கும்) கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு விசேட படியொன்றினை செலுத்த முடியும். இக்கொடுப்பனவினைப் பெற்றுக் கொள்வதற்காக வாகனத்தினைப் பயன்படுத்திய அலுவலரினால் பொது 35 உறுதிச்சீட்டில் (வவுச்சரில்) கையொப்பமிட்டு பிரயாணச் செலவு கோரும் உறுதிச்சீட்டுடன் (வவுச்சருடன்) சமர்பித்தல் வேண்டும்.

| இல | விபரம் | தொகை (ரூபா) |
|---|---|---|
| 1 | சேவை நிலையம் அமைந்துள்ள மாவட்டத்திற்குள் | 900.00 |
| 2 | தனது நிரந்தர சேவை நிலையத்திலிருந்து தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட மாவட்டத்தின் பிரதான நகருக்கான தூரம் கி.மீ. 50 வரை | 1300.00 |
| 3 | தனது நிரந்தர சேவை நிலையத்திலிருந்து தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட மாவட்டத்தின் பிரதான நகருக்கான தூரம் கி.மீ. 100 வரை | 1700.00 |
| 4 | தனது நிரந்தர சேவை நிலையத்திலிருந்து தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட மாவட்டத்தின் பிரதான நகருக்கான தூரம் கி.மீ. 150 வரை | 2100.00 |
| 5 | தனது நிரந்தர சேவை நிலையத்திலிருந்து தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட மாவட்டத்தின் பிரதான நகருக்கான தூரம் கி.மீ. 150 இற்கு மேல் | 2500.00 |

2 ஆம் பக்கம்

03. நிபந்தனைகள்

I. வாகனம் சிறந்த ஓட்டத்தரத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

II. வாகனமானது மக்கள் கொந்தளிப்பு, கலகம், குழப்பங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய முழுக்காப்புறுதி கொண்டதாக இருத்தல் வேண்டுமெனபதுடன் ஏதாவது திடீர் விபத்தொன்றில் அல்லது வேறு ஏதாவது முறையில் வாகனத்திற்கு சேதம் ஏற்பட்டால் அதன் சகல பொறுப்புக்களையும் காப்புறுதி நிறுவனம் அல்லது அவரால் பொறுப்பேற்றுக் கொள்ளப்படல் வேண்டும். அதற்காக தேர்தல் ஆணைக்குழு எந்தவொரு முறையிலும் தலையீடு செய்யமாட்டாது.

III. குறித்த வாகனம் அலுவலருக்கு அல்லது துணைக்கு உரித்துடையதாக இருத்தல் வேண்டும். விசேட காரணங்களின் கீழ் விவாகமாகாத அலுவலர்களுக்கு தந்தை/தாய்/சகோதர சகோதரிகளின் அல்லது விவாகமான அலுவலர்களின் தந்தை/தாய்/பிள்ளைகளுக்குச் சொந்தமான வாகனங்களைப் பயன்படுத்துவதற்கான அனுமதி வழங்குதல் தொடர்பாக கவனத்திற் கொள்ள முடியும். (அதனை உறுதிப்படுத்துவதற்காக V-4 படிவத்தை நிரப்பித் தரும் சந்தர்ப்பத்தில் வாகனத்தின் வருமான அனுமதிப் பத்திரத்தின் பிரதியினை இணைத்திருத்தல் வேண்டும்.)

IV. குறித்த வருடத்தின் ஆரம்பத்தில் தமது திணைக்களத் தலைவரினால் கடமை நடவடிக்கைகளின் பொருட்டு கேட்டுப் பெற்ற தனிப்பட்ட வாகனத்தினைப் பயன்படுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ள அனுமதிக் கடிதத்தின் பிரதியுடன் கோரிக்கை விடுத்தால் மாத்திரமே கேட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனத்தினைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்க முடியும்.

V. **இந்த வாகனத்திற்கு அலுவலர் கடமையாற்றும் அலுவலகத்தினால் அல்லது மாவட்டத் தேர்தல் அலுவலகத்தினால் அல்லது வேறேதேனும் விதத்தில் எரிபொருள் வழங்கப்படக்கூடாது. அதனால் அவ்வாறான கோரிக்கைகளை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொறுப்பேற்கக் கூடாது.**

04. தமது தனிப்பட்ட வாகனங்களில் வருகைதரும் தலைமை வாக்கெண்ணல் அலுவலர்கள் / உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் கடமைக்கு சமுகமளித்தவுடன், V-4 படிவத்தை இருபிரதிகளில் பூரணப்படுத்தி வாகனத்தின் வருமான அனுமதிப் பத்திரத்தினது பிரதியுடன் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரிடம் (போக்குவரத்து) கையளித்தல் வேண்டும். V – 4 படிவத்தின் மாதிரியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. வாக்கெடுப்பு அலுவல்கள் நிறைவடைந்ததன் பின்னர் அலுவலர் திரும்பி வருவதற்கு முன்னர் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் (போக்குவரத்து) அப்படிவத்தின் "ஆ" பகுதியினை பூரணப்படுத்தி ஒரு பிரதியை குறித்த அலுவலரிடம் கையளித்தல் வேண்டும். அலுவலர் **பிரயாணச் செலவினைக் கோரும் போது அந்த V-4 படிவத்தை உறுதிச்சீட்டுடன் (வவுச்சருடன்) இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். இச்சான்றிதழ் இல்லாத எந்தவொரு பிரயாணச் செலவு உறுதிச்சீட்டிற்கும் கொடுப்பனவை மேற்கொள்ளாதிருப்பதற்கு கொடுப்பனவுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும்.**

05. தாம் வாகனத்தைக் கொண்டு வருவதாக தெரிவத்தாட்சி அலுவலர்/பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணையாளரிடம் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்திலேயே தனிப்பட்ட சாரதியொருவரை அழைத்து வருவதாயின் அதற்கும் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அவருக்கு செலுத்தப்படும் படிகள் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் தமது தனிப்பட்ட வாகனத்துடன் சாரதியினை அழைத்து வரும்போது கொடுப்பனவு செய்யப்படும் விதத்திலாகும். **இக்கொடுப்பனவு குறித்த சாரதியின் பெயரில் மாத்திரமே மேற்கொள்ளப்படும்.** அலுவலரால் கையளிக்கப்பட வேண்டிய V-4 படிவத்திற்கு மேலதிகமாக, சாரதியினால் V-5 படிவத்தை இரு பிரதிகளில் பூரணப்படுத்தி உதவித் தெரிவத்தாட்சி அலுவலரிடம் (போக்குவரத்து) கையளித்தல் வேண்டும். அவரால் அதன் "ஆ" பகுதியினை பூரணப்படுத்தியதன் பின்னர் ஒரு பிரதியை சாரதியின் வருகைச் சான்றிதழாக பிரயாணச் செலவு உறுதிச்சீட்டுடன் (வவுச்சருடன்) இணைத்து சமர்ப்பிப்பதற்காக சாரதியிடம் கையளித்தல் வேண்டும். உறுதிச்சீட்டுடன் (வவுச்சருடன்) சாரதி அனுமதிப் பத்திரத்தின் போட்டோ பிரதியினையும் இணைத்துச் சமர்ப்பிக்குமாறு சாரதியை அறிவுறுத்தல் வேண்டும். V-5 படிவமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட **வாகனங்களைக் கொண்டுவராத எந்தவொரு அலுவலருக்கும் வாகனத்தைக் கொண்டு வந்ததாக சான்றிதழ் வழங்குவதை தவிர்த்துக் கொள்ள வேண்டுமென்பதுடன்** அவ்வாறு வாகனங்களைக் கொண்டு வராது சான்றிதழைக் கோருகின்ற அலுவலர்கள் தொடர்பான அறிக்கைகளைப் பேணி எனக்கு அனுப்பி வைப்பதற்கு தயவுசெய்து நடவடிக்கை மேற்கொள்ளவும்.

3 ஆம் பக்கம்

06. மாவட்டங்களில் போதியளவான பதவிநிலை அலுவலர்கள் இல்லாத காரணத்தினால் வெளியிலிருந்து பெருமளவிலான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களைப் பெற்றுக் கொள்ளும் **கம்பஹா, களுத்துறை, கேகாலை மற்றும் புத்தளம்** போன்ற மாவட்டங்களில் **வலயக் கடமைகளில் ஈடுபடுத்துவதன் பொருட்டு போதியளவான எண்ணிக்கையில் வாகனங்கள் காணப்படாவிடத்து** வலயக் கடமைகளில் ஈடுபடுத்தப்படும் வெளியிலிருந்து வரும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களின் வாகனங்களை அதற்காக ஈடுபடுத்த முடியும். இதற்காக மாருதி, ஸ்டார்லெட் போன்ற சிறிய வாகனங்களை ஈடுபடுத்தல் ஆகாது. ஏனைய மாவட்டங்களில் வலய உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அரச வாகனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென்பதுடன் மாவட்டத்திற்குள் கடமையாற்றும் அலுவலர்களுக்கு வலயக் கடமைகளுக்காக அவர்களின் தனிப்பட்ட வாகனங்களை அல்லது ஒதுக்கப்பட்ட வாகனங்களை ஈடுபடுத்துவதற்கு அனுமதி வழங்குவது சிறந்ததாகும்.

07. வலய உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக நியமனம் பெற்றுள்ள இந்த அலுவலர்கள் கொண்டுவரும் வாகனங்களுக்கு தனிப்பட்ட சாரதிகளை ஈடுபடுத்துதல் வேண்டும். இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் (போக்குவரத்து) CR புத்தகமொன்றினை தயாரித்து அப்படிவத்திற்கமைய குறித்த விபரங்களை பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

08. வலயக் கடமைகளில் ஈடுபடும் அலுவலர்களுக்கு அவர்கள் கொண்டு வரும் வாகனங்கள் இடர்பாடுகளுக்கு முகம் கொடுத்து கடமைகளில் ஈடுபடுத்த வேண்டியிருப்பதால் மேலே 02 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேலதிகமாக அயிரம் ரூபாவினை (1000.00) செலுத்த முடியும்.

தேர்தல் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க,**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

**பிரதிகள் :-**

1. கணக்காய்வாளர் நாயகம்
2. செயலாளர், தேர்தல் ஆணைக்குழு
3. மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (தேசிய தேர்தல்கள்)
4. தலைமை நிதி அலுவலர்
5. தலைமை உள்ளக கணக்காய்வாளர்
6. கணக்காளர் (கொடுப்பனவு)

**குறிப்பு :- மேலே இல.06 இல் குறிப்பிடப்பட்ட மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் வலய கடமைகளுக்காக வெளியிலிருந்து வருகை தருகின்ற உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களின் சொந்த வாகனங்களை வலயக் கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு அவசியமெனில் அதற்கு எனது முன்னனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.**

සභාපති
தவிசாளர்
දුරකථන/தொலைபேசி : 011-2868444
ෆැක්ස්/ தொலைநகல்: 011-2868445
*e-mail :comelesl@sltnet.lk*

සහකාර මැතිවරණ කොමසාරිස් (පාලන)
உதவித் தேர்தல்கள் ஆணையாளர் (நிருவாகம்)
දුරකථන/தொலைபேசி:011-2868450
ෆැක්ස්/தொலைநகல் : 011-2868450
*e-mail : admin@elections.gov.lk*

පරිපාලන නිලධාරි
நிருவாகஅலுவலர்
දුරකථන/தொலைபேசி: 011-3083371
ෆැක්ස්/தொலைநகல் : 011-3083371
*e-mail : info@elections.gov.lk*

(இரண்டு பிரதிகளில் பூரணப்படுத்தவும்)

**V - 4**

**பாராளுமன்றத் தேர்தல் - 2020.08.05**

**தலைமை வாக்கெண்ணும் அலுவலர்களினால் / உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் கொண்டுவரப்படுகின்ற சொந்த வாகனங்கள் தொடர்பான தகவல்கள்**

1. அலுவலரின் பெயர் : ……………………………………………………………………………………
2. நிரந்தரப் பதவி : ……………………………………………………………………………………
3. அலுவலக முகவரி : ……………………………………………………………………………………
4. தனிப்பட்ட முகவரி : ……………………………………………………………………………………
5. கையடக்க தொ.பே. இலக்கம் : ……………………………………………………………………………
6. கொண்டுவரப்பட்ட சொந்த வாகனம் தொடர்பான விபரங்கள்

   வாகனத்தின் இல : ……………………………………… (பெற்றோல்/ டீசல்) *

   வாகனம் தன்னுடையதா / தனது துணைக்குச் சொந்தமானதா என்பது : …………………………………
   **(உறுதிப்படுத்துவதற்காக வருமான அனுமதிப்பத்திரத்தின் போட்டோ பிரதியொன்றை இத்துடன் இணைக்கவும்.)**

7. தெரிவத்தாட்சி அலுவலரிடம் அறிக்கையிட்ட திகதி மற்றும் நேரம்

   திகதி : 2020.08……. நேரம் : ……………………

நான் 2020.08……. ஆம் திகதி மேலே குறிப்பிடப்பட்ட இலக்கத்தையுடைய எனது / துணையின் வாகனத்தில்* ……………………………………………………… மாவட்டத்திற்கு தேர்தற் கடமைகளுக்கு வருகை தந்தேன் என்பதை அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

2020.08……

………………………………

கையொப்பம் :

(அலுவலரின் பெயருடனான பதவி முத்திரை)

---

**பகுதி "ஆ" (அலுவலக உபயோகத்திற்காக)**

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலரான திரு/திருமதி/செல்வி ……………………………………………… அவர்கள் ………………… ஆம் இலக்க வாகனத்தில் வருகை தந்தாரென நான் தனிப்பட்ட முறையில் திருப்தியடைகின்றேன். இவ்வலுவலர் ……………………… ஆம் திகதி ………………… மணிக்கு வருகைதந்தாரெனவும் ……………………… ஆம் திகதி ……………… மணிக்கு அவ்வாகனத்தில் திரும்பிச் சென்றார் என்பதையும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

திகதி : 2020.08……… கையொப்பம் : …………………………………

உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் (போக்குவரத்து)

(பெயருடனான பதவி முத்திரையை பதிக்கவும்.)

**கவனிக்கவும்:** சொந்த வாகனங்களைக் கொண்டுவரும் மேற்கூறப்பட்ட சகல அலுவலர்களும் வருகைதந்த உடனேயே இந்த படிவத்தை இரண்டு பிரதிகளில் பூர்த்தி செய்து தனது வாகனத்தின் வருமான அனுமதிப்பத்திரத்தின் போட்டோ பிரதியொன்றுடன் உதவித் தெரிவத்தாட்சி அலுவலருக்குக் (போக்குவரத்து) கையளித்தல் வேண்டும். திரும்பிச் செல்வதற்கு முன்பதாக இதன் "ஆ" பகுதியை உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் (போக்குவரத்து) மூலமாக பூர்த்தி செய்து ஒரு பிரதியை எடுத்துக்கொள்ள வேண்டும். கொடுப்பனவுகளுக்கான வவுச்சருடன் அந்தப் பிரதியை இணைத்துச் சமர்ப்பித்தல் வேண்டும்.

❖ விஷேட காரணங்களின் கீழ் விவாகமாகாத அலுவலர்கள் தந்தை, தாய், சகோதர சகோதரிகளுக்குச் சொந்தமான வாகனங்களையும்,
விவாகமான அலுவலர்கள் - தந்தை, தாய், பிள்ளைகளுக்குச் சொந்தமான வாகனங்களையும் பயன்படுத்த முடியும்.

**(*- தேவையற்ற சொற்களை வெட்டிவிடவும்.)**

(இரண்டு பிரதிகளில் பூரணப்படுத்துக.)

V-5

## பாராளுமன்றத் தேர்தல் - 2020.08.05

**தலைமை வாக்கெண்ணும் அலுவலர்களினால் / உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் அழைத்துவரப்படுகின்ற தனிப்பட்ட சாரதிகளுக்கான வரவுச் சான்றிதழ்.**

01. வாகனம் உரித்துடைய அலுவலரின் பெயர் : ..........................................................................

02. பதவி : ..........................................................................

03. அமைச்சு / திணைக்களத்தின் பெயரும் முகவரியும் : ..........................................................................

04. கொண்டுவரப்பட்ட வாகனத்தின் இல. : ..........................................................................

05. வாகனத்தின் சாரதியாக கடமையில் ஈடுபடுத்தப்பட்ட நபரின் பெயர் : ..........................................................................

06. அவரது முகவரி : ..........................................................................

07. தேசிய அடையாள அட்டை இல. : ..........................................................................

08. சாரதி அனுமதிப்பத்திர இல. : ..........................................................................

09. சாரதியின் கையொப்பம் : ..........................................................................

தலைமை வாக்கெண்ணும் அலுவலராக / தெரிவத்தாட்சி அலுவலராக ........................................ மாவட்டத்திற்கு கடமைகளுக்காக மேலே காணப்படும் இலக்கத்தைக் கொண்ட வாகனத்தில் வருகைதந்த நான் அந்த வாகனத்தின் சாரதியாக திரு. .................................................. அவர்களை கடமையில் ஈடுபடுத்தினேன் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : 2020

..............................................................

உதவித் தெரிவத்தாட்சி அலுவலரின் கையொப்பம்.
(பெயருடனான முத்திரையை பதிக்கவும்.)

---

### பகுதி "ஆ" – (அலுவலக உபயோகத்திற்கு)

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலருக்குச் சொந்தமான .................................................. ஆம் இலக்க வாகனத்தின் சாரதியாக திரு. .................................................................. என்பவர் வருகைதந்தாரென்பதை அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

திகதி : 2020.

..........................................................

உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் (போக்குவரத்து)
(பெயருடனான இலச்சினையை இடவும்.)

**கவனிக்க** : இந்தப் படிவத்தை இரண்டு பிரதிகளில் பூர்த்தி செய்து உதவித் தெரிவத்தாட்சி அலுவலரிடம் (போக்குவரத்து) கையளித்தல் வேண்டும். "ஆ" பகுதியை உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் (போக்குவரத்து) மூலமாக பூர்த்தி செய்து ஒரு பிரதியை பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன், அதனை சாரதியின் பிரயாணச் செலவுக்கான வவுச்சருடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் சாரதி அனுமதிப் பத்திரத்தின் போட்டோ பிரதியொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

PE/2020/TR-09 இன் 7 ஆம் பந்திக்குரிய படிவ

# பாராளுமன்றத் தேர்தல் - 2020.08.05

## தலைமை வாக்கெண்ணல் அலுவலர்கள் / உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு தனிப்பட்ட வகையில் சொந்தமான வாகனங்களைப் பயன்படுத்தல்.

| அலுவலரின் பெயர் | நிரந்தரப் பதவி | திணைக்களம் | வாகன இலக்கம் | எரிபொருள் பயன்பாடு (லீற்றருக்கு கிலோமீற்றர்) | அலுவலரின் கையொப்பம் | உதவித் தெரிவத்தாட்சி அலுவலரால் (போக்குவரத்து) பூரணப்படுத்தப்படல் வேண்டும் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | மாவட்டத்திற்கு அறிக்கையிட்ட பின்னர் மைலோ மீற்றர் வாசிப்பு | உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் ஈடுபடுத்தப்பட்ட வலயம் | வலயத்தில் ஓடிய பிறகு மீற்றர் வாசிப்பு (மைலோ மீற்றர்) | போக்குவரத்து செய்த முழு கி.மீற்றர் எண்ணிக்கை | உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் (போக்குவரத்து) கையொப்பம் |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |